






## பா.ஜ.க.விடம் சிக்கினால் ஜம்மு – காஷ்மீரை உடைத்தது போன்று

# தமிழ்நாட்டை துண்டு துண்டாக ஆக்கிவிடுவார்கள்!

### பெரம்பலூர் – தேர்தல் பிரச்சார மாபெரும் பொதுக்கூட்டத்தில்

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!

பெரம்பலூர், ஏப்.18

**பா.ஜ.க. குனியச் சொன்னால், படுத்தே விட்டார் பழனிசாமி; இப்படிப்பட்ட அடிமைகளின் துணையோடு தமிழ்நாட்டிற்குள் நுழைய நினைப்பவர்களை எல்லையிலேயே நாம் தடுத்து நிறுத்த வேண்டும். பா.ஜ.க.விடம் தமிழ்நாடு சிக்கினால், ஜம்மு காஷ்மீரை உடைத்தது போன்று தமிழ்நாட்டையும் மூன்று யூனியன் பிரதேசமாகத் துண்டு துண்டாக ஆக்கிவிடுவார்கள் என பெரம்பலூர் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எச்சரிக்கை விடுத்தார்.**

**கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.04.2026) பெரம்பலூரில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:-**

**“வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி
மக்களின் மனதில் நிற்பவர் யார்?
மாபெரும் வீரர் மானங் காப்போர்
சரித்திரந்தனிலே நிற்கின்றார்!
அச்சம் என்பது மடமையடா
அஞ்சாமை திராவிடர் உடமையடா
ஆறிலும் சாவு, நூறிலும் சாவு
தாயகம் காப்பது கடமையடா!
தாயகம் காப்பது கடமையடா!”**

அப்படித் தாயகம் காக்கும் கடமை இன்றைக்குத் தமிழ்நாட்டில் இருக்கும் ஒவ்வொருவர் மேலேயும் விழுந்திருக்கிறது!

இந்தியாவின் அரசியல் வரைபடத்தையே - தென்னிந்திய மக்களின் எதிர்காலத்தையே சின்னாபின்னம் ஆக்கும் கருப்புச் சட்டம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

**தமிழ்நாட்டில் பரவிடும் தீ
டெல்லியை சுட்டெரிக்கும்!**

இன்று காலையிலேயே, உங்களில் ஒருவனாக இருக்கும் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் கருப்புக் கொடி ஏற்றி, அந்தச் சட்ட நகலை எரித்து, நம்முடைய எதிர்ப்பைக் காட்டியிருக்கிறோம். தமிழ்நாட்டில் பரவியிருக்கும் இந்தத் தீ, டெல்லியைச் சுட்டெரிக்கும் என்று எச்சரிக்கை விடுத்திருக்கிறேன்.

இதனை எதிர்த்துப் போராடவில்லை என்றால், நாம் தமிழர்களாக இருந்து எந்தப் பயனும் இல்லை! இன்னும் சொன்னால், இதனை எதிர்க்காத யாரும் தங்களைத் தமிழர் என்று சொல்லிக் கொள்ளத் தகுதியும் இல்லை.

தலைவர் கலைஞர் தெளிவாகச் சொல்லிட்டுப் போயிருக்கிறார், “கொற்றக்குடையா? கொள்கையா? எது வேண்டும் எனில், கொள்கையை விற்றுப் பிழைக்க வேறு நபர் பார் என்போம்! ஆட்சி வரும்… போகும்… நிலையல்ல! அய்யா, அண்ணா வகுத்த கொள்கை போகாது; வாழும் நிலையாக!” என அன்றே சொல்லிட்டார்!

தேர்தல், ஆட்சி அதிகாரம் இவை அனைத்துமே நமக்கு இரண்டாம் பட்சம்தான்! தமிழ்நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்றுதான் ஆட்சிக்கே வந்தோம்! இப்போது, தமிழ்நாட்டுக்கு ஆபத்து என்றால், தி.மு.க. பார்த்துக் கொண்டு சும்மா இருக்குமா! உயிரே போனாலும் தி.மு.க. இந்த அநியாயத்தை தடுக்கும்!

வடக்கோடு போர் செய்வது தமிழ்நாட்டிற்கு என்ன புதிதா? நன்றாகவே பழக்கப்பட்டதுதானே? தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும்,



தமிழினத் தலைவர் கலைஞரும் ஏற்கனவே செய்த போர் இது! அப்போது அவர்களுடைய தளபதியாக அந்தப் போரில் பங்கெடுத்த இந்த ஸ்டாலின், இன்றைக்கு நானே தலைமை தாங்கிப் போரை நடத்தும் கடமையைக் காலமும் தமிழ்நாட்டு மக்களும் எனக்கு வழங்கியிருக்கிறார்கள். திராவிடப் பெருந்தலைவர்கள் சுழற்றிய

> ### “போருக்கு நான் தயார்! நீங்கள் தயாரா?
>
> **“வடக்கோடு போர் செய்வது தமிழ்நாட்டிற்கு என்ன புதிதா? நன்றாகவே பழக்கப்பட்டது தானே? தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், தமிழினத் தலைவர் கலை ஞரும் ஏற்கனவே செய்த போர் இது! அப்போது அவர்களுடைய தளபதியாக அந்தப் போரில் பங்கெடுத்த இந்த ஸ்டாலின், இன்றைக்கு நானே தலைமை தாங்கிப் போரை நடத்தும் கடமையைக் காலமும் தமிழ்நாட்டு மக்களும் எனக்கு வழங்கியிருக்கிறார்கள். திராவிடப் பெருந்த லைவர்கள் சுழற்றிய வாள் இன்றைக்கு என் கைக்கு வந்திருக்கிறது. போருக்கு நான் தயார்! நீங்கள் தயாரா? சண்டை செய்ய நான் ரெடி! நீங்கள் ரெடியா? தமிழ்நாடு மொத்தமும் சுற்றி வந்து கேட்டுவிட்டேன், அனைவரும் ரெடி! பெரும் போருக்கு பெரம்பலூர் ரெடியா? வடக்கே கங்கை வரை சென்று வெற்றி கொண்ட ராஜேந்திர சோழனின் அரியலூர் ரெடியா? நன்றி!”**

வாள் இன்றைக்கு என் கைக்கு வந்திருக்கிறது. போருக்கு நான் தயார்! நீங்கள் தயாரா? சண்டை செய்ய நான் ரெடி! நீங்கள் ரெடியா? தமிழ்நாடு மொத்தமும் சுற்றி வந்து கேட்டுவிட்டேன், அனைவரும் ரெடி! பெரும் போருக்கு பெரம்பலூர் ரெடியா? வடக்கே கங்கை வரை சென்று வெற்றி கொண்ட ராஜேந்திர சோழனின் அரியலூர் ரெடியா? நன்றி!

இப்போது நம்முடைய வெற்றி வேட்பாளர்களை உங்களுடைய அனுமதியோடு அறிமுகப்படுத்தப் போகிறேன்.

முதலில், குன்னம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள். ‘அரியலூர் அரிமா’ என என்னால் பாராட்டப்பட்டவர். அமைச்சர், எழுத்தாளர், சிந்தனையாளர், பேச்சாளர், களப்போராளி. மகளிருக்குக் கட்டணமில்லா விடியல் பயணம் திட்டத்தை மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி, 2 லட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்பை வழங்கியும் சிறப்பாகச் செயல்பட்டிருக்கிறார்.

அடுத்து, பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் டாக்டர் ஜெயலட்சுமி அவர்கள். மருத்துவராக இருந்தாலும் மக்கள் பணியாற்ற வந்திருக்கிறார். இவருடைய அம்மா சரோஜினி அவர்கள், திருச்சி மற்றும் பெரம்பலூர் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளராக இருந்தவர். ஜெயலட்சுமி பெரம்பலூர் மாவட்ட மருத்துவர் அணித் தலைவராகப் பணியாற்றி வருகிறார்.

அடுத்து, அரியலூர் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் லதா பாலு அவர்கள். திருமானூர் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராக இருந்து, சிறப்பாக மக்கள் பணியாற்றியவர். அரியலூர் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளராக மூன்று முறை இருந்திருக்கிறார். இப்போது மாவட்டக் கழகத் துணைச் செயலாளராக இருக்கிறார்.

**அரியலூருக்கு கொண்டு
வந்த திட்டங்கள்!**

அடுத்து, ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் க.சொ.க. கண்ணன் அவர்கள். ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினராக இருந்து, நல்ல பல திட்டங்களை இந்தத் தொகுதிக்குக் கொண்டு வந்தவர். கடந்த 5 ஆண்டுகளில் இந்தத் தொகுதிக்கு மட்டுமே 2 ஆயிரத்து 107 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டப் பணிகளைக் கொண்டு வந்திருக்கிறார்.

இந்த நான்கு பேருக்கும் உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் எல்லாம் பெருவாரியான வாக்கினை வழங்கி, வெற்றி பெற வைக்க வேண்டும்!

நான்கு பேருடைய வெற்றியும் உறுதியா? உறுதி (மக்கள்). நன்றி! வேட்பாளர்கள் இப்போது உட்காரலாம்! உங்கள் சீட் கன்ஃபார்ம் ஆகிவிட்டது!

இந்த அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களுக்கு, நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் செய்து தந்திருக்கும் நலத்திட்டப் பணிகளில் முக்கியமான சிலவற்றை மட்டும் நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அரியலூரைப் பொறுத்தவரையில்,

**ஜெயங்கொண்டத்தில், பல்லாயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் காலணி தொழிற்சாலை,**

**கங்கைகொண்ட சோழபுரத்தில் மாபெரும் அருங்காட்சியகம்,**

**மாமன்னர் இராஜேந்திர சோழன் பிறந்த ஆடி திருவாதிரை நாளை, அரசு விழாவாக அறிவித்து, கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.**

**ஜெயங்கொண்டம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குப் புதிய கட்டடம்,**

**ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனை, மாவட்டத் தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்வு,**

**ஆண்டிமடத்திற்குப் புதிய தீயணைப்பு நிலையம்,**

**அரியலூரில் 8 கோடி ரூபாய் மதிப்பில் புதிய பேருந்து நிலையம்,**

**மருதையாற்றின் குறுக்கே தடுப்பணை,**

**அரியலூரில் புதிய நூலக கட்டடம்.**

**அதேபோன்று, பெரம்பலூர் மாவட்டத்தில்,**

**பெரம்பலூர் பெற்ற
நன்மைகள் ஏராளம்!**

**பெரம்பலூர் நகராட்சி மாநகராட்சியாகத் தரம் உயர்வு,**

**பெரம்பலூர் மாவட்டம் – அரும்பாவூரில் கைவினைஞர்களின் நலனுக்காகப் பொது பயன்பாட்டு மையம்,**

**வேப்பூர் மற்றும் செந்துறை அரசு மருத்துவமனைகளில் புதிய கட்டடங்கள்,**

**கொளக்காநத்தம் பகுதியில் துணை மின் நிலையம்,**

**வேப்பூர் அரசு கல்லூரியில் விடுதி கட்டடம்,**

**குன்னத்தில் புதிய பேருந்து பணிமனை மற்றும் ஐ.டி.ஐ. கட்டடம்,**

**கொளக்காநத்தம் பகுதியில் புதிய அரசுக் கல்லூரி,**

**ஆடுதுறை - ஆக்கனூர் உயர்மட்ட மேம்பாலம்,**

**செந்துறையில் துணை மின் நிலையம்,**

**பெரியவெண்மணியில் அரசு மாதிரி பள்ளி மற்றும் விடுதிகள்,**

**350 கோடி ரூபாயில் காவேரி மற்றும் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் திட்டம்,**

**எறையூரில் புதிய சிப்காட் பூங்கா,**

**பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்குப் புதிய கட்டடங்கள்,**

**பாடாலூர் அருகே திருவிளக்குறிச்சியில் ஆவின் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை.**

**எங்கள் சாதனைகளைச் சொல்லி
உங்களிடம் வாக்குக் கேட்கிறேன்!**

இப்படிப்பட்ட சாதனைகளுக்குச் சொந்தக்கார அரசுதான், திராவிட மாடல் அரசு! இத்தனை சாதனைகளைச் செய்துவிட்டுத்தான் உங்களுடைய ஆதரவைக் கேட்க வந்திருக்கிறேன்.

தொகுதி மறுவரையறை தொடர்பாக அரசியல் ரீதியாக நான் விளக்கிவிட்டேன். இப்போது இல்லை, ஓராண்டிற்கும் மேலாக குரல் கொடுத்துக் கொண்டு இருக்கிறேன். தெலங்கானா மாநில முதலமைச்சர் மாண்புமிகு ரேவந்த் அவர்கள் ஒரு பதிவு போட்டிருக்கிறார். “இந்தியாவில் நீங்கள் தான் இதனை முதன்முதலில் சொல்லி எச்சரித்தீர்கள், நீங்கள் சொன்னது போன்று இப்போது நடக்கிறது” என்று அவருடைய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

தொகுதி மறுவரையறை ஆபத்தை இன்னும் எளிமையாகச் சொல்ல வேண்டும் என்று நிறையப் பேர் என்னிடம் கோரிக்கை வைத்தார்கள். ஒரு கதை சொல்கிறேன், சொல்லலாமா?

**இருப்பதைப் பறிப்பதுதான்
தொகுதி மறுவரையறைத் திட்டம்!**

நீங்கள் ஒரு கம்பெனியில் வேலை செய்கிறீர்கள். உங்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் சம்பளம். உண்மையாக உழைக்கிறீர்கள். சொல்லும் அனைத்து வேலைகளையும் நீங்கள் சிறப்பாகச் செய்கிறீர்கள். உங்களால்தான் அந்தக் கம்பெனிக்கு லாபமே கிடைக்கிறது. இன்னொருவர் அதே கம்பெனியில் ஊழியராக இருக்கிறார். உங்களுக்குக் கொடுப்பதைவிட அந்த ஆளுக்கு இரண்டு மடங்காக 20 ஆயிரம் ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள். ஆனால், சொல்லும் எந்த வேலையையும் அந்த ஆள் சரியாகச் செய்ய மாட்டார். இப்போது அனைவருக்கும் சம்பளம் உயர்த்தப் போகும் நேரத்தில், வேலையே செய்யாத அந்த ஆளுக்கு 20 ஆயிரத்தில் இருந்து 50 ஆயிரம், சொன்ன அனைத்து வேலைகளையும் சரியாகச் செய்து கொண்டிருக்கும் இவருக்கு,

தொடர்ச்சி 9 –ஆம் பக்கம்